வெளியீடு எண்: 78. 2000—Novr. '28.

702
VII. C.
17

# அஹிம்ஸை

அதன் பொருளும்,

அதை அனுஷ்டிக்கும் விதமும்,

அதன் பலனும்,

தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபை,

436, தங்கசாலைத் தெரு,

சென்னை.

இதன் விலை 0-0-6.

மகாமகோபாத்தியாய டாக்டர்
சாமிநாதையர்

புராணிகர், காளத்தி
திரு. இ. சிதம்பரசாமி பாண்டியர்
அவர்கள்

# அன்பளிப்பு

---

அஹிம்ஸை என்னும் பதத்திற்கு ஹிம்ஸை இன்மை அல்லது துன்பமின்மை என்று பொருள். ஜீவன்களுக்குத் துன்பஞ் செய்தல் ஹிம்ஸை எனப்படும் அதற்கு எதிராக ஜீவன்களுக்குத் துனபஞ் செய்யாமல் அவைகளுக்கு இதத்தையே செய்தல் அஹிம்ஸை எனப்படும். எல்லாத் தருமங்களும் அஹிம்ஸையில் அடங்கியிருத்தலால் அதையே மிகவும் மேலான தருமம் என்றார்.

"அஹிம்ஸா பரமோ தர்மம்" என்னும் பழைய வாக்கியத்தை விளக்கி அஹிம்ஸையைப்பற்றி ஓர் சிறிய கட்டுரை வெளியிடும்படி சில நண்பர்கள் எமக்கு எழுதினார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி இந்த சிறிய புத்தகத்தைப் பதிப்பித்துள்ளோம். இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் தங்களுடைய அபிப்பிராயத்தையும், தங்களுக்கு ஏதாவது புதிய கருத்துக்கள் தோன்றினல் அவற்றையும் எமக்குத் தெரிவிப்பதோடு இப்புத்தகத்தைப் பலரும் வாசிக்கும்படி செய்யவேணுமாய்க் கோருகிறோம்.

காரியதரிசி,
தெ. ஜீ. பி. சபை.

# அஹிம்ஸை.

கடவுள், ஆன்மா, உலகம் ஆகிய தத்துவங்களை நம்பி, அவைகளின் சுவரூபங்களையும் குணங்களையும் உள்ளவாறு அறிந்து, நல்லொழுக்கத்தில் நடப்பதே முக்திமார்க்கம் என்று கூறப்பட்டுள்ளது. கொலை, பொய், களவு, காமம், அவா ஆகியவற்றினின்றும் நீங்கிய ஒழுக்கம் நல்லொழுக்க மெனப்படும். அவ்வொழுக்கமும் இல்லறம் துறவறம் என இருவகைப்படும். துறவறத்திலுள்ளவர்கள் மேலே சொல்லப்பட்ட ஐந்து குற்றங்களினின்றும் முழுதும் நீங்கியவர்கள். ஆனால் இல்லறத்தாரோ அவ்வாறு இருத்தல் முடியாது. அவர்கள் மேலே சொன்ன குற்றங்களுள் பெரியவற்றை செய்யாதிருக்கவேண்டும்.

"பெரிய கொலைபொய் களவொடு காமம்
பொருளை வரைதலோ டைந்து"

என்பது விதி. உண்மையில் பஞ்சமகா பாதகங்களும் ஹிம்ஸையேயாகும். ஏனெனில் அவைகள் எல்லாம் ஆத்மாவினுடைய நிச்சய குணத்தைக் கெடுக்கின்றன.

## ஹிம்ஸை என்பது என்ன.

கோபம், கர்வம், மாயை, லோபம் ஆகிய கெட்ட குணங்களால் தூண்டப்பட்டு நாம் ஒரு ஜீவனுடைய பிராணனைத் துன்புறுத்துதல் ஹிம்ஸை எனப்படும். பிராணன் நான்கு வகைப்படும். அவை இந்திரியப் பிராணன், பலப்பிராணன், சுவாசப்பிராணன், ஆயுப்பிராணன் என்பன. இவற்றுள் இந்திரியப் பிராணன் ஐந்தும்

(மெய், வாய், கண், மூக்கு, செவி), பலப்பிராணன் மூன்றும் (காயபலம், வாக்கு பலம், மனோபலம்), சுவாசப் பிராணனும் ஆயுப்பிராணனும் சேர்ந்து பத்துப்பிராணன்கள் என்றும் கூறுவர்.

## உயிர்களும் பிராணன்களும்.

உயிர்கள் தாம் பெற்றிருக்கும் அறிவுகளுக்குத் தக்கபடி ஐந்து வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் எனப்படும்.

இவற்றுள் ஓரறிவுயிர்களாகிய மரம், செடி முதலியவற்றிற்கு ஸ்பரிசன இந்திரியமும் (உற்றறிவு), காயபலமும், சுவாசமும், ஆயுளும் ஆக நான்கு பிராணன்கள் உண்டு.

ஈரறிவுயிர்களுக்கு மேலே சொன்னவற்றோடு சுவையறிவும், வாக்கு பலமும் சேர்ந்து ஆறு பிராணன்கள் உண்டு.

மூவறிவுயிர்களுக்கு மேலேசொன்னவற்றோடு வாசனையறிதலும் சேர்ந்து ஏழு பிராணன்கள் உண்டு.

நான்கறிவுயிர்களுக்கு மேலே சொன்னவற்றோடு தோற்ற அறிவும் சேர்ந்து எட்டுப் பிராணன்கள் உண்டு.

ஐயறிவுயிர்களுக்கு ஓசை யறிவுஞ்சேர்ந்து ஒன்பது பிராணன்கள் உண்டு.

மனிதன், யானை, மான், பசு, ஆடு முதலிய அநேக ஐயறிவுடைய பிராணிகளுக்கு மேலே சொன்னவற்றோடு மனோபலமும் சேர்ந்து பத்துப் பிராணன்கள் உண்டு.

மனிதன் கோபத்தையோ, கர்வத்தையோ, வஞ்சகத்தையோ, லோபத்தையோ கொண்டிருக்கும்பொழுது

முதலில் தன்னுடைய ஆத்மனை துன்புறுத்துகின்றான். ஆகையால் தன்னுடைய ஆத்ம விருத்தியைக் கோருகின்ற ஒவ்வொருவனும் மேலே சொன்ன நான்கு குற்றங்களும் தன்னிடத்து உண்டாகாதபடி காக்கவேண்டும்.

## ஹிம்ஸையும் அதன் பேதங்களும்.

ஒரு ஜீவனுக்குத் துன்பம் செய்யவேண்டுமென்று மனதில் நினைப்பதே ஹிம்ஸையாகும். ஒரு ஜீவனுக்கு மனதில் துக்கமோ அல்லது பயமோ உண்டாகும்படி சொல்லுகின்ற சொல்லும் ஹிம்ஸையைத் தருவதாகும்.

ஹிம்ஸை நான்கு பேதத்தனவாகும். அவை சங்கல்பினி ஹிம்ஸை, விரோதினி ஹிம்ஸை, ஆரம்பினி, ஹிம்ஸை, உத்யோகினி ஹிம்ஸை எனப்படும்.

சங்கல்பினி ஹிம்ஸை என்பது ஒரு ஜீவனை வதைக்க வேண்டும் அல்லது கொல்லவேண்டுமென்கின்ற எண்ணத்தோடு அதைத் துன்புறுத்துதல்.

விரோதினி ஹிம்ஸை என்பது ஒருவன் தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக செய்கின்ற ஹிம்ஸை. உதாரணமாக தன்மேல் பாயவரும் புலியை அடித்தல். அல்லது அரசன் தன் இராச்சியத்தின்மேல் படை எடுத்துவரும் ஒரு சேனையை எதிர்த்து அதனோடு சண்டைசெய்தல்.

ஆரம்பினி ஹிம்ஸை என்பது நாம் தினந்தோறும் செய்யும் நித்தியக் கடமைகளினால் ஏற்படும் ஹிம்ஸை. உதாரணமாக வீட்டைப்பெருக்குதல், கழுவுதல், மெழுகுதல், சமைத்தல் முதலியவற்றால் உண்டாகும் ஹிம்ஸை.

உத்யோகினி ஹிம்ஸை என்பது நாம்செய்யும் உழவு முதலிய அறுவகைத் தொழில்களினால் உண்டாகும் ஹிம்ஸை.

உத்தமத்துறவிகள் மேலேசொன்ன நான்கு வகையான் (ஹிம்ஸையில்) துன்புறுத்தல் களினின்றும் நீங்கியவர்கள்.

இல்லறத்தான் முதல் வகையான ஹிம்ஸையை முற்றும் ஒழிக்க வேண்டும். அதாவது அவன் தனக்குத் தெரிந்து ஒரு ஜீவனையும் துன்பஞ்செய்யவே கூடாது. இன்னும் அவன் மற்ற மூன்று விதமான ஹிம்ஸையையும் கூடிய வரையில் செய்யாதிருக்க முயல வேண்டும்.

ஹிம்ஸை அல்லது ஜீவவதையைக் குறைப்பதற்குச் செய்யவேண்டிய காரியங்களாவன :—

(1) **மாமிச போஜனம் செய்வதை நிறுத்தல்:**— மாமிசத்திற்காக தினம் இலக்ஷக்கணக்கான உயிர்கள் மடிகின்றன. ஜனங்கள் மாமிசம் தின்னுவதை ஒழித்தால் அநேகம் வாயில்லாப் பிராணிகளின் கொலை நிற்கும். நாம் மாமிசத்தை வாங்காவிட்டால் ஒருவனும் ஜீவனைக் கொன்று புலாலை விற்கமாட்டான்.

"தினற்பொருட்டாற் கொள்ளா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்"

மாமிச உணவு மனிதனுக்கு அனாவஸ்ய மென்பதையும் அதன் கெடுதிகளையும் "மனிதனுடைய உணவு" என்னும் எங்களுடைய 72-வது வெளியீட்டில் விரிவாகக் காணலாம்.

(2) **வேட்டையாடுவதை நிறுத்தல்:**—சிலர் காட்டிற்குச் சென்று புலி, சிறுத்தை, மான், எருமை, முயல் முதலிய பிராணிகளையும் காட்டுப்பறவைகளையும் பயமுறுத்தி ஓடவிட்டும் பறக்கவிட்டும் அவைகளை துப்பாக்கியால் சுட்டு அவைகள் துடிக்கத்துடிக்க பதைக்கப் பதைக்க மரண அவஸ்த்தைப் படுகின்றதைப்பார்த்து சந்தோஷ

மடைகின்றார்கள். இது என்ன சந்தோஷம்! அவர்களை யாராவது அம்மாதிரி வேட்டை யாடுவதென்றால் அதற்கு அவர்கள் சம்மதப்படுவார்களா? மனிதர்கள் வேட்டை யாடுவதை நிறுத்தினால் காட்டில்வாழும் பிராணிகளுக்கும் பறவைகளுக்கும் க்ஷேமமுண்டாகும். ஒரு பிராணியின் உயிரை நீக்குவது எமனுடைய தொழில். அந்தக்கொடுந் தொழிலை கருணாமூர்த்தியாயிருக்க வேண்டிய மனிதன் ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(௬) அலங்காரம் செய்துக்கோள்வதற்காக செய்யப் படும் கொலையை நிறுத்தல்:—கடவுள் எல்லா ஜீவராசிகளை யும் மனிதனுடைய உபயோகத்திற்காக படைத்திருக்கிறார் என்கின்ற தப்பான எண்ணத்துடனும் அகங்காரத்துட னும் மனிதர்கள் அனியாயமாக அநேக உயிர்களை வதைக் கின்றார்கள். கழுத்தில் போட்டுக்கொள்வதற்காக பூனையின் தோலையும், இடுப்பில் கட்டிக்கொள்வதற்காக பாம்பின் தோலையும், குண்டூசிகளைக் குத்திவைப்பதற்காக முதலைக் குட்டிகளின் தலைகளையும், பேனா சொருகி வைத்துக்கொள் வதற்காக பல்லியின் தோலையும், பணம் வைத்துக்கொள் வதற்காக அணிப்பிள்ளையின் தோலையும், இன்னும் அநேக விஷயங்களுக்காக பற்பல ஜீவராசிகளின் தோலையும் உறுப் புக்களையும் உபயோகிக்கின்றார்கள். பச்சோந்தி, கீரிப் பிள்ளை, நரிக்குட்டி முதலிய பிராணிகளையும் அநேக வித மான பக்ஷிகளையும் கொன்று அவற்றுள் பஞ்சை அடை த்து அலங்காரப்பொருள்களாக மேசையின் பேரிலும் கண் ணாடி அறைகளிலும் வைத்துக்கொள்ளுகிறார்கள். இது புது நாகரீகத்தின் அடையாளம்போலும். மனிதனுடைய நாக ரீக மேம்பாட்டிற்குத் தேவையான அநேக பொருள்கள் வனஸ்பதிகளிடத்திருந்தே கிடைக்கின்றன. அவற்றை

விட்டுவிட்டு வாய், நாசி, கண், காது, உடம்பு, உணர்ச்சி முதலியவர்களில் நம் பெரும்பாலும் ஒத்திருக்கும் மிருகங்களையும் பக்ஷிகளையும் கொல்வது என்ன அனியாயம். மனிதன் தன்னுடைய புது நாகரீகத்தை மறந்து விடுவானானல் அநேக உபயோகமுள்ள மிருகங்களும் அழகிய பக்ஷிகளும் குறையாமல் வாழ்ந்து நம்முலகை இன்புறச் செய்யும்.

(4) ஞான விருத்திக்காக செய்யப்படும் கொலையை நிறுத்தல் :—வைத்திய சாஸ்திரத்தின் அபிவிருத்தியை முன்னிட்டு அமெரிக்கா முதலிய நாடுகளில் தின்ந்தோறும் அநேக நாய்களையும், பூனைகளையும், பன்றிகளையும் வதைத்துக் கொன்று அவைகளின் உறுப்புக்களை அறுத்துப் பரிசைஷ செய்கின்றார்களாம். இந்தமாதிரி ஞானம் பெறுவிட்டால் மனிதனுச்கு என்ன மோசம் வந்துவிடும். என்ன மோசம் வந்தால்தான் என்ன ? உண்மையான ஞானிகள் எந்தவிதமான கொலையையும் செய்யத் துணியார்கள். எல்லாவிதமான ஞானமும் சுத்த ஆத்மாவினிடத்தில் தானகவே ஒளிரும்.

(5) தேவதைகளுக்கு உயிர்ப்பலி கொடுத்தலை நிறுத்தல் :—தேவதைகளுக்கு உயிர்ப்பலி கொடுப்பதால் தங்களுக்கு வருகின்ற கஷ்டங்கள் நீங்கிவிடுவதாக சில நண்பர்கள் நம்பியிருக்கின்றார்கள். இது ஒரு பெரிய மூட நம்பிக்கை. தேவதைகள் உயிர்ப்பலியை விரும்புவதே இல்லை. உயிர்ப்பலி கொடாவிட்டால் அவைகள் நம்மிடத்து கோபிப்பதுமில்லை. மனிதனுக்கு ஒரு கடவுளும் மற்ற ஜீவராசிகளுக்கு ஒரு கடவுளும் இல்லை. நம்மை ரக்ஷிக்க விரும்புகின்ற தெய்வம் மற்ற ஜீவன்களுடைய க்ஷேமத்தையும் விரும்புமென்று நமது நண்பர்கள் என்

உண்ணக்கூடாது. யாகத்தில் செய்யப்படும் கொலையும் பாவத்தைத் தருமே தவிர புண்ணியத்தை தரவே தராது. ஆமணக்கு நட்டால் ஆச்சாவாகுமா?

மேலேசொன்ன காரணங்களேயன்றி வேறு பல காரணங்களை முன்னிட்டும் மனிதன் ஜீவவதை செய்கின்றான். இத்தகைய வதைக்கு சங்கல்பினி ஹிம்ஸை என்று பெயர். இதை ஒவ்வொரு மனிதனும் ஒழிக்கவேண்டும். மற்ற மூன்றுவிதமான ஹிம்ஸைகளையும் (விரோதினி ஹிம்ஸை, ஆரம்பினி ஹிம்ஸை, உத்யோகினி ஹிம்ஸை) இல்லறத்தான் ஒவ்வொருவனும் கூடுமானவரையில் அதிக கவனத்துடன் விலக்கவேண்டும்.

## அஹிம்ஸையை அனுஷ்டிக்கும் விதம்.

அஹிம்ஸையை அனுஷ்டிக்க விரும்புகின்ற ஒவ்வொரு மனிதனும் கீழ்க்கண்ட ஐந்து குணங்களையும் முதலில் பெறவேண்டும். அவை பேச்சில் அடக்கம், மனதில் அடக்கம், நடக்கும்பொழுது கவனம், எந்தப் பொருளையும் எடுக்கும்பொழுதும் வைக்கும்பொழுதும் கவனம் செலுத்துதல், உணவையும் பானத்தையும் நன்றாக பரிசோதனை செய்தபிறகு உட்கொள்ளுதல் என்பன. இவற்றை வடநூலார் வாக்குப்தி, மனோகுப்தி, ஈர்யாசமிதி, ஆதானநிக்ஷேபணசமிதி, ஆலோகித பான போஜனம் என்பர்.

"வாக்மனோகுப்தீர்யாதான நிக்ஷேபண ஸமித்யா லோகித பானபோஜனானி பஞ்ச:" (தத்வார்த்த சூத்ரம் 7-4).

**பேச்சில் அடக்கம்** :—அஹிம்ஸா விரதத்தை மேற்கொண்டு ஒழுக விரும்புகின்றவன் அதிகமான பேச்சுக்களையும் அனாவசியமான பேச்சுக்களையும், பிறருக்கு துன்

பத்தைத்தரக்கூடிய பேச்சுக்களையும் பேசக்கூடாது அவனுடைய சொற்கள் இனிமையாகவும் கேட்கின்றவர்களுக்கு சந்தோஷத்தைத் தரக்கூடியனவாயு மிருக்கவேண்டும்.

**மன அடக்கம்** :—தன் மனதை கண்டவாறு திரிய வொட்டாமல் அடக்கி ஜீவதயையோடு ஒன்றி இருக்கச் செய்யவேண்டும்.

**கவனமாக நடத்தல்** :—நடக்கும்பொழுது கவனமாக கீழே பூமியைப்பார்த்து மெதுவாக நடக்கவேண்டும். கவனிக்காமல் நடந்தால் அநேக சிறிய ஜீவன்கள் காலில் மிதிப்பட்டு இறந்தொழியும். அது வேண்டுமென்று செய்த ஹிம்ஸையாகும்.

**எந்தப் பொருளையும் எடுக்கும்பொழுதும் வைக்கும் பொழுதும் கவனத்துடன் செய்தல்** :—எந்தப் பொருளையும் திடீரென்று எடுக்கவும் திடீரென்று வைக்கவும் கூடாது. எதையும் மெதுவாக எடுத்து மெதுவாக வைக்க வேண்டும்.

**உணவையும் பானத்தையும் நன்ருக பரிசோதித்த பிறகு உட்கொள்ளல்** :—நாம் உட்கொள்ளும் உணவிலும் பானத்திலும் ஈ, எறும்பு, கொசுகு முதலிய ஜீவன்கள் இல்லாதபடிக்கு நன்ருக பார்த்துவிட்டு பிறகு சாப்பிட வேண்டும். சாப்பிடும்பொழுதும் இவைகள் ஆகாரத்துடன் கலவாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அதிக வெளிச்சமான இடத்திலிருந்து சாப்பிடவேண்டும். இரவில் உண்ணு விரதத்தை ஏற்றல் நல்லது.

அஹிம்ஸா விரதத்தை அனுஷ்டிக்கின்றவன் பிறரிடத்தில் கீழ்க்கண்டவாறு நடந்துகொள்ளவேண்டும்.

மைத்ரி ப்ரமோத காருண்ய மாத்யஸ்தானி ச ஸத்வ குணதிக க்லிஸ்யமாண அவினயேஷு—(தத். 7-11).

(இ-ள்) எல்லா ஜீவன்களிடத்தும் சிநேகத்தன்மையும், குணத்தில் சிறந்த பெரியோர்களிடத்து விநயமும், துன்பப்படுகின்ற ஜீவன்களிடத்து கருணையும், விரோதிகளிடத்து மத்தியஸ்த பாவனையும் வேண்டும்.

இன்னும் அஹிம்ஸா விரதத்தை அநுஷ்டிக்கின்ற ஒருவன் கீழ்க்கண்ட குற்றங்களினின்றும் நீங்கியிருக்க வேண்டும்.

1. மிருகத்தையோ அல்லது மனிதனையோ கட்டி வைத்தல். பக்ஷிகளைக் கூண்டில் அடைத்தல். சிறிய இடத்தில் அநேக பிராணிகளை அடைத்தல்.

2. பிராணிகளை அடித்துத் துன்புறுத்தல்.

3. பிராணிகளின் அங்கங்களைக் குறைத்தல்.

4 சுமக்கமுடியாத பாரத்தை ஏற்றுதல்.

5. உணவையும் ஜலத்தையும் கொடாதிருத்தல் அல்லது அவைகளைக் குறைவாகக் கொடுத்தல்.

## அஹிம்ஸையின் பெருமை.

அஹிம்ஸா தருமம் மற்ற எல்லா தருமங்களையும் தனக்குள்ளே அடக்கிக்கொண்டிருக்கின்றது. ஏனெனில் ஜீவனைத் துன்பப்படுத்துவதேயன்றி, பொய் சொல்வதும், களவுசெய்தலும், காமமாடுதலும், பொருளை அதிகமாகச் சேர்த்தலும் ஹிம்ஸையேயாகையால் இவ்வைந்துமில்லாதிருத்தல் அஹிம்ஸையாகும்.

**பொய் சொல்லுதல்** :—பிரமத்த யோகத்தினால் (குரோத, மான, மாயா, லோபத்தினால்) உள்ளதை இல்லையென்றும், இல்லாததை உள்ளதென்றும், ஒன்றல்லாததை அதுவேயென்றும் சொல்வது பொய் சொல்வ

தாகும். பொய் சொல்லுகின்றவன் முதலில் தன் ஆன்மாவுக்கு துன்பத்தைச் செய்வதோடு பிறவுயிர்களுக்கும் துன்பத்தைச் செய்கின்றவனாகின்றான்.

**களவுசெய்தல்:**—பிரமத்த யோகத்தினால் ஒருவரால் நமக்குக் கொடுக்கப்படாத பொருளை எடுத்தல் திருட்டாகும். அதுவும் ஹிம்ஸையாகும் ஏனெனில் திருடுகின்ற ஒருவன் முதலில் தன்னுடைய ஆத்மனுக்குத் துன்பஞ் செய்கின்றான். திருடும்பொழுது அவன் அகப்பட்டுவிட்டால் அவனைப் பிடித்து அடித்துத் துன்புறுத்துகின்றார்கள். ஒருவன் பொருளை இழந்தானானால் அதிக கஷ்டப்படுகின்றான். சிலர் மிக விலையுயர்ந்த பொருளை இழந்து விட்டால் தங்கள் உயிரையும் விடுகின்றனர். ஏனெனில் பொருள் இன்றி உயிர் வாழமுடியாது. பொருளில்லார்க்கிவ்வுலகமில்லை. பொருள் உயிருக்குச்சமானம். பொருளை அபகரிக்கின்றவன் உயிரை அபகரிக்கின்றவனாகின்றான்.

**காமமாடுதல்:**—புணர்ச்சி செய்யும்பொழுது அநேக ஆயிரக்கணக்கான நுட்பஜீவன்கள் இறப்பதாக டாக்டர் மேரி ஸ்டோப்ஸ் போன்ற பெரிய டாக்டர்கள் கண்டு பிடித்திருக்கின்றார்கள். நம்நாட்டிலிருந்த பழைய ரிஷிகளும் அவ்வாறு கூறியிருக்கின்றனர். ஆகையால் காமமாடாமல் இருந்தால் அதனால் ஏற்படக்கூடிய ஜீவஹிம்ஸை இல்லாதிருக்கும். ஆனால் இல்லறத்தான் அவ்வாறு இருக்கமுடியாது. ஆகையால் அவன் தன் மனைவியையன்றி வேறு பெண்களை காம இச்சையுடன் பார்த்தலுங்கூடாது. உத்தம துறவிகள் எல்லாப் பெண்களையும் தங்கள் சகோதரிகளாகவே பாவிக்கின்றார்கள்.

**அவாவுடைமை:**— பொருள்களின்மேல் அதிக ஆசையைவைத்து அவற்றை அதிகமாக சேர்க்க விரும்பு

திலும் ஹிம்ஸைக்குக் காரணமாகின்றது. ஏனெனில் ஆன்மாவிற்கும் இந்த உலகத்திலுள்ள எந்தப் பொருளுக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. ஒருவன் ஒரு பொருளின்மேல் அதிகப் பற்றுள்ளவனயிருந்தபோதிலும் அப்பொருள் அவன் இறக்கும் பொழுது அவனேடு செல்வதில்லை. ஆகையால் அவன் அப்பொருளைவிட்டுப் பிரியும் பொழுது அதிக துக்கப்படுகின்றான். அவனுடைய சுற்றத்தாரும் துக்கப்படுகின்றார்கள். ஆகையால் அவன் தன் ஆத்மனுக்கு துன்பத்தைத் தருவதோடு மற்றவர்களுக்கும் துன்பத்தைத் தருகின்றான். இரண்டிடத்தும் ஹிம்ஸை நிகழ்கின்றது. ஆகையால் அவாவுடைமையும் ஹிம்ஸைக்குக் காரணமாகின்றது.

ஆகையால் கொலை, பொய், களவு, காமம், அவா ஆகிய ஐந்து பாபங்களும் ஹிம்ஸாமயமானது. இவ்வைந்தினின்றும் நீங்கியிருத்தல் அஹிம்ஸையாகும்.

அஹிம்ஸா விரதத்தை அனுஷ்டிக்க விரும்புகின்ற ஒருவன் பழகவேண்டிய விஷயங்கள்.

1. எந்த ஜீவனுக்கும் கெடுதியை நினையாதிருத்தல்.

2. பிறருக்கு துன்பத்தைத் தரும் வார்த்தைகளைப் பேசாதிருத்தல்,

3. நடக்கும் பொழுதும், உட்காரும் பொழுதும், பொருள்களை எடுக்கும் பொழுதும் அவைகளை வைக்கும் பொழுதும் கவனமாகவும் மெதுவாகவும் சிறிய ஜீவன்களுக்கும் கெடுதி நேராதபடி செய்யவேண்டும்.

4 மாமிச போஜனத்தையும், கள்ளையும், தேனையும் உண்ணுதிருக்கவேண்டும். தேனையுண்பது கொலைக்கு

சமானமாக சொல்லப்பட்டிருக்கின்றது. ஏனெனில் ஒரு தேன் கூண்டை அழிக்கும்பொழுது அநேக ஆயிரக்கணக்கான தேனீக்களும் புழுக்களும் மடிகின்றன.

5. அன்னத்தையும் பானத்தையும் நன்றாகப் பரிசோதித்து உட்கொள்ளவேண்டும். இரவிலுண்ணுமையை பழகுதல் நல்லது. இரவிலுண்பது மாமிசமுண்பதற்கு சமானம் என்று மார்க்கண்டேய ரிஷி கூறியிருப்பதாக சொல்லுகின்றனர்.

6. ஜீவவதை செய்வதற்கு அநுகூலமாயிருக்கும் துப்பாக்கி, வாள், ஈட்டி, முதலிய கருவிகளையும் விஷங்களையும் வியாபாரஞ்செய்யவும் பிறருக்குக் கொடுக்கவுங் கூடாது.

7. எல்லா ஜீவன்களிடத்தும் அன்பும், குணத்தில் சிறந்தவர்களிடத்து பணிவும், துன்பப்படுகின்ற ஜீவன்களிடத்து கிருபையும், தனக்குத் துன்பஞ் செய்கின்றவர்களுக்கு நன்னயஞ் செய்தலும் வேண்டும்.

8. கோபத்தையும், கர்வத்தையும், மயக்கத்தையும், லோபத்தையும் அறவே ஒழிக்கவேண்டும்.

## அஹிம்ஸையின் பலன்

அஹிம்ஸா தருமத்தை யாதொரு குற்றமுமின்றி அநுஷ்டிக்கின்றவர்களுக்கு கைகூடாதது ஒன்றுமில்லை.

" அஹிம்ஸையே மேலான தருமம் ; அஹிம்ஸையே இந்திரிய நிக்ரஹம் ; அஹிம்ஸையே பெரிய தானம் ; அஹிம்ஸையே பெரிய தவம் " என்று மஹா பாரதத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் அஹிம்ஸையை அநுஷ்டிக்கின்றவனிடத்து தருமத்தின் பலனும், இந்திரிய நிக்ர

ஹத்தின் பலனும், தானத்தின் பலனும், தவத்தின் பலனும் வந்து சேருகின்றன.

அஹிம்ஸையை அனுஷ்டிக்கின்றவனுடைய ஆன்மா சிக்கிரத்தில் பரமாத்ம நிலையை அடைகின்றது. "அஹிம்ஸா பூதானும் ஜகதி விதிதம் பிரம்ம பரமம்" என்றார் ஸ்ரீ சுவாமி சமந்தபத்திராசாரியர். அவனை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும். இந்திரன் முதலான தேவர்கள் அவனுக்குத் தொண்டுபுரிவார்கள். அவன் முன்னிலையில் எல்லா வராசிகளும் விரோதமின்றி அதிக சிநேகபாவத்துடன் வாழும்

---

1. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
   கென்புதோல் போர்த்த வுடம்பு.
2. பணிவுடைய னின்சொல னாத லொருவற்
   கணியலல மற்றுப் பிற
3. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
   சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு
4. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
   முயிரினு மோம்பப் படும்
5. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
   வீயா தடியுறைந் தற்று.
6. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
   செறுவார்க்குஞ் செய்யா விடல்
7. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
   வின்னா வுலகம் புகல்